காஞ்சிபுரம் மாவட்டம் சுகாதாரப்பணிகள் இணை இயக்குநர் அவர்களின்
செயல்முறை ஆணை
முன்னிலை : மரு.ஆர்.சந்தரராஜ், MBBS, D.L.O.,

மு.மு.எண்.6228/ந2/17 நாள். 3.3.17.

பொருள் நிர்வாகம் - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4ன் பணிகள் போட்டி தேர்வு 2013-2014 - மூலம் தேர்வு செய்யப்பட்டவர் - மருத்துவத் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட செல்வி.ஆ.தனலட்சுமி, தட்டச்சர், இந்திய மருத்துவம் (ம) ஓமியோபதி இயக்குனரகத்தில் பணிநியமனம் செய்யப்பட்டவர் தற்போது பணியிட மாறுதலில் காஞ்சிபுரம், இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகத்தில் பணிபுரிபவர் - தற்காலிகப் பணி வரன்முறைசெய்தல் - ஆணை - வழங்குதல் - தொடர்பாக.

பார்வை
1. சென்னை தமிழ்நாடு அரசு தேர்வாணையம் செயலாளர் அவர்களின் ந.க.எண்.5904/PSD-F-2014 நாள்.29.09.2014
2. சென்னை மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்களின் ந.க.எண்.56491/ந2/2/2014 நாள்.29.10.2014
3. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி முதன்மை செயலர் அவர்களின் பணிநியமன ஆணை எண்.10634/ந2/3/2014 நாள்.06.11.2014
4. இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி கூடுதல் தலைமை செயலாளர் சென்னை-106 அவர்களின் ந.க.எண்.13235/அ3/2016 நாள்.08.02.2017

- - - - -

ஆணை

பார்வை 1ல் கண்டுள்ள தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய தொகுதி-4ன் வழியில் தட்டச்சர் பதவிக்கு தேர்வு செய்யப்பட்டு பார்வை 2ல் காணும் கடிதவழி இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 3ல் காணும் பணிநியமன ஆணைப்படி இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்ககத்தில் தட்டச்சராக ரூ.5200-2400 த.ஊ. என்ற ஊதிய விகிதத்தில் பணிநியமனம் மற்றும் பணியிட ஆணை வழங்கப்பட்ட செல்வி.ஆ.தனலட்சுமி, தட்டச்சர் என்பவர் 12.11.2014 முற்பகல் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநரகத்தில் இணைந்துள்ளார். தட்டச்சர் பணிக்கான தெரிவு தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் உறுதிபடுத்தப்பட்டுள்ளதாலும், முறையான தட்டச்சர் பதவிக்கான முழுத் தகுதியும் பெற்றுள்ளதாலும் தமிழ்நாடு மாநில மற்றும் சார்பு நிலை பணிகளுக்கான விதி 23அ ன் கீழ் தட்டச்சராக பணியில் இணைந்த நாளான 12.11.2014 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

தனியர் பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்று ஆண்டுப் பணிக்காலத்திற்குள் இரண்டாண்டு பணிக்காலத்தை திருப்திகரமாக முடிக்கும் வரையில் தகுதிகாண் பருவகாலத்தில் வைக்கப்படுகிறார்.

மேலும் இப்பணியாளர் அரசாணை எண் 130 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 22.07.08ன்படி Certificate course in awarded by the Director of Technical Education Computer on Office Automation மற்றும் தமிழ்நாடு மருத்துவ தொகுப்பு விதி (TamilNadu Medical Code) துறைத்தேர்வு தனது இரண்டாண்டு பணிக்காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டும்.

இணைப்பு - I தொகுதி பணிப்பதிவேடு

இணை இயக்குநர் நலப்பணிகள்
காஞ்சிபுரம்

பெறுநர்,
செல்வி. ஆ. தனலட்சுமி, தட்டச்சர்,
இணை இயக்குநர் நலப்பணிகள் அலுவலகம், காஞ்சிபுரம்
- உரிய வழிமுறையாக.

நகல்:-
முதன்மை செயலாளர், இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி,
சென்னை-106. - தகவலுக்காக
பணிப்பதிவேடு
கோப்பு / உதிரி